# பள்ளி மாணவர்களிடையே
# வரிமானவரித்துறையின் புதுமைப்பிரச்சாரம்

# கறுப்புப்பணம் பற்றிய ரஜினி வசனத்தை திரையிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

வருமானவரி பற்றி பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுவையான நிகழ்ச்சி சென்னை கொளத்தூர் எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளியில் நடைபெற்றது. இதில் சிவாஜி திரைப்படத்தில் கறுப்புப் பணம் பற்றி ரஜினிகாந்த் பேசிய வசனத்தை வருமானவரித்துறை அதிகாரிகள் திரையிட்டுக் காண்பித்தனர்.

"ஏதோ வருமானவரித்துறை அதிகாரிகள் வீட்டிற்கு வந்தால் எல்லாவற்றையும் எடுத்துச்சென்று விடுகின்றனர் என்ற தவறான அபிப்பிராயம் இளைய தலைமுறைக்கு உள்ளது. இதைப் போக்கவும், கறுப்புப் பணம் பதுக்காமல் முறையாக வருவான வரி செலுத்தும் புதிய தலைமுறையை உருவாக்கவும்தான் இந்த நிகழ்ச்சியை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்" என்று வருமான வரித்துறை இணை ஆணையர் சுமதி வெங்கட்ராமன் நிகழ்ச்சியை துவக்கி வைத்துப் பேசினார்.

"அரசு எல்லா மக்களின் நலனுக்காக பாடுப்படுகிறது. மக்களின் அடிப்படைவசதிகள், மற்றும் பல்வேறு கட்டமைப்புச் சார்ந்த செலவுகளுக்காக அரசுக்கு பணம் தேவைப்படுகிறது. இதனால்தான் சம்பாதிப்பவர்களிடம் ஒரு பகுதி வருமானவரியாக வசூலிக்கப்படுகிறது" என்றார் அவர்.

வருமான வரித்துறையின் செயல்பாடுகள் பற்றிய விளக்கக் காட்சியை (Powerpoint) திரையிட்டு விளக்கிய அவர் "நீங்கள் வளர்ந்து பணம் சம்பாதிக்கும் போது முறையாக வரிசெலுத்த வேண்டும். அந்த மனப்பான்மையை இப்போதே வளர்த்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய வருமான வரித் துறை அதிகாரி உமா மகேஸ்வரி வருமான வரி எப்படி வசூலிக்கப்படுகிறது மற்றும் வரி செலுத்தாதவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து மாணவர்களிடம் விளக்கினார்.

சிவாஜி திரைப்படத்தில் நடிகர் ரஜினிகாந்த் கறுப்புப்பணம் பற்றி விளக்கிய காட்சியை வருமான வரித்துறையினர் மாணவர்களுக்கு திரையிட்டு காட்டினர். இதில் "தமிழ்நாட்டில் மட்டும் 2 லட்சம் கோடி ரூபாய் கறுப்புப் பணம் உள்ளது" என்று ரஜினி கூறிய போது மாணவர்கள் திகைப்புடன் பார்தனர்.

பின்னர், மாணவர்களை கேள்வி கேட்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். மாணவர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு வருமான வரித்துறை அதிகாரிகள் அளித்த விளக்கமும் வருமாறு:

கேள்வி : வருமான வரித்துறை ஊழியர்களும் வருமான வரிகட்ட வேண்டுமா? கட்டுகிறார்களா?

பதில் : ஆம், நிச்சையமாக. எங்களுக்கு எந்தவித சலுகையும் இல்லை.

கேள்வி : நான் உழைத்துச் சம்பாதிக்கிறேன். இது ஜனநாயக நாடு. நான் ஏன் வருமான வரி செலுத்த வேண்டும். சோம்பேறியாக இல்லாமல், உழைத்துச்சாம்பாதிப்பதற்கு இது தண்டனையா?

பதில் : இல்லவே இல்லை. இந்த சமுதாய வளர்ச்சியில், நாட்டு வளர்ச்சியில் எல்லோருக்கும் பங்கு உண்டு. ஒரு குறிப்பிட்ட வருமானம் வரை வரி செலுத்தத் தேவையில்லை. அதைத்தாண்டிய வருமானத்தில்தான், அதில் கூட ஒரு பகுதிதான், வரியாக வசூலிக்கப்படுகிறது.

கேள்வி : கறுப்புப்பணம் என்றால் என்ன? கருப்பு கலரில் இல்லாத பணத்தை கறுப்புப்பணம் என்பது ஏன்?

பதில் : வருமானத்தை மறைத்து ஒளித்து வைக்கப்படும் பணம்தான் கறுப்புப்பணம். கணக்கில் காட்டாமல் ரகசியமாக வைக்கப்படுவதால் கறுப்புப்பணம் என்கிறோம்.

கேள்வி : வருமான வரி ரெய்டு என்றால் என்ன?

பதில் : எங்களிடம் தரப்பட்ட வருமான வரிப்பற்றிய தகவல்களில் சந்தேகம் இருந்தாலோ, அல்லது இது பற்றிய தகவல் வந்தாலோ வீட்டுக்கோ அல்லது அலுவலகத்துக்கோ சென்று சோதனையிடுவதைத்தான் ரெய்டு என்கிறோம்.

கேள்வி : அரசியல்வாதிகள் கூட வருமான வரி செலுத்த வேண்டுமா?

பதில் : யாராக இருந்தாலும் சட்டத்திற்கு உட்பட்டு வருமான வரி செலுத்தியாக வேண்டும். இதில் செல்வாக்கு என்பதற்கு இடமில்லை.

கேள்வி : கறுப்புப்பணத்தை எங்கேயெல்லாம் பதுக்கிவைக்கிறார்கள் என்பதை எப்படி கண்டுபிடிக்கிறீர்கள்?

பதில் : சந்தேகத்தின் அடிப்படையிலும், எங்களுக்கு வரும் தகவல்களின் அடிப்படையிலும் எங்கேயெல்லாம் கறுப்புப்பணம் பதுக்கப்படுகிறது என்பதை எங்களால் கண்டுப்பிடிக்க முடியும்.

கேள்வி : வருமான வரி செலுத்தாதவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கிறீர்கள்?

பதில் : அபராதம், சிறை போன்ற தண்டனைகள் உண்டு.

கேள்வி : நான் வருமான வரித்துறை அதிகாரியாக வர என்ன செய்ய வேண்டும்?

பதில் : பதவிக்கேற்ப பிளஸ்-டு முதல் பட்டப்படிப்பு வரை தகுதிகள் உண்டு. இதற்காக நடத்தப்படும் தேர்வு எழுதி தேர்ச்சி பெறவேண்டும். பணியில் சேர்ந்த பிறகு கூட, மேல் பதவிக்காக தேர்வு எழுதி வர முடியும்.

இவ்வாறு அதிகாரிகள் மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தனர். நிகழ்ச்சியில் வருமான வரித்துறை அலுவலர் சரவணன் அருண்குமார், எவர்வின் பள்ளியின் சி.இ.ஓ மகேஸ்வரி, தாளாளர் புருஷோத்தமன், முதல்வர் கலையரசி ஆகியோரும் பங்கேற்றனர்.